ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ சீலைக்குதம்பை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சீலைக்குதம்பை ॥

## கண்ணன் வரவு கண்டு அன்னை மகிழ்தல்

‡சீலைக் குதம்பை ஒருகாதொருகாது⋆
செந்நிற மேல் தோன்றிப்பூ⋆
கோலப் பணைக் கச்சும் கூறை உடையும்⋆
குளிர் முத்தின் கோடாலமும்⋆
காலிப் பின்னே வருகின்ற⋆ கடல் வண்ணன்
வேடத்தை வந்து காணீர்⋆
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார்⋆ நங்கைமீர்!
நானே மற்றாரும் இல்லை (1)

கன்னி நன் மா மதிள் சூழ் தரு⋆ பூம் பொழில்
காவிரித் தென்னரங்கம்⋆
மன்னிய சீர் மதுசூதனா! கேசவா!⋆
பாவியேன் வாழ்வுகந்து⋆
உன்னை இளங்கன்று மேய்க்கச்⋆ சிறுகாலே
ஊட்டி ஒருப்படுத்தேன்⋆
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை⋆
என் குட்டனே முத்தம் தா (2)

காடுகள் ஊடு போய்க்⋆ கன்றுகள் மேய்த்து
மறியோடி⋆ கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா!⋆ கற்றுத்
தூளி காண் உன் உடம்பு⋆
பேடை மயிற் சாயல் பின்னை மணாளா!⋆
நீராட்டமைத்து வைத்தேன்⋆
ஆடி அமுதுசெய் அப்பனும் உண்டிலன்⋆
உன்னோடுடனே உண்பான் (3)

www.prapatti.com

கடி ஆர் பொழில் அணி வேங்கடவா!⋆ கரும்
போரேறே!⋆ நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக்⋆
கொள்ளாதே போனாய் மாலே!⋆
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன⋆
சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி⋆ உன் கண்கள் சிவந்தாய்⋆
அசைந்திட்டாய் நீ எம்பிரான்! (4)

பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை⋆
வாய்வைத்த போரேறே!⋆ என்
சிற்றாயர் சிங்கமே! சீதை மணாளா!⋆
சிறுக்குட்டச் செங்கண் மாலே!⋆
சிற்றாடையும் சிறுப் பத்திரமும்⋆ இவை
கட்டிலின் மேல் வைத்துப் போய்⋆
கற்றாயரோடு நீ கன்றுகள் மேய்த்துக்⋆
கலந்துடன் வந்தாய் போலும் (5)

அஞ்சுடர் ஆழி உன் கையகத்தேந்தும்⋆
அழகா! நீ பொய்கை புக்கு⋆
நஞ்சுமிழ் நாகத்தினோடு பிணங்கவும்⋆
நான் உயிர் வாழ்ந்திருந்தேன்⋆
என் செய்ய என்னை வயிறு மறுக்கினாய்⋆
ஏதும் ஓர் அச்சம் இல்லை⋆
கஞ்சன் மனத்துக்குகப்பனவே செய்தாய்⋆
காயாம்பூ வண்ணம் கொண்டாய்! (6)

பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய⋆
பாற்கடல் வண்ணா! உன்மேல்⋆
கன்றின் உருவாகி மேய்புலத்தே வந்த⋆
கள்ள அசுரர் தம்மை⋆
சென்று பிடித்துச் சிறுக் கைகளாலே⋆
விளங்காய் எறிந்தாய் போலும்⋆



www.prapatti.com

என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள்⋆
    அங்ஙனம் ஆவர்களே (7)

கேட்டறியாதன கேட்கின்றேன்⋆ கேசவா!
    கோவலர் இந்திரற்கு⋆
காட்டிய சோறும் கறியும் தயிரும்⋆
    கலந்துடன் உண்டாய் போலும்⋆
ஊட்ட முதல் இலேன் உந்தன்னைக் கொண்டு⋆
    ஒருபோதும் எனக்கரிது⋆
வாட்டம் இலாப் புகழ் வாசுதேவா!⋆ உன்னை
    அஞ்சுவன் இன்று தொட்டும் (8)

திண்ணார் வெண் சங்குடையாய்!⋆ திருநாள் திரு-
    வோணம் இன்றேழு நாள்⋆ முன்
பண் நேர் மொழியாரைக் கூவி முளை அட்டிப்⋆
    பல்லாண்டு கூறுவித்தேன்⋆
கண்ணாலம் செய்யக்⋆ கறியும் கலத்த-
    தரிசியும் ஆக்கி வைத்தேன்⋆
கண்ணா! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல்⋆
    கோலம் செய்திங்கே இரு (9)

‡புற்றரவல்குல் அசோதை நல் ஆய்ச்சி⋆ தன்
    புத்திரன் கோவிந்தனை⋆
கற்றினம் மேய்த்து வரக் கண்டுகந்து⋆ அவள்
    கற்பித்த மாற்றம் எல்லாம்⋆
செற்றம் இலாதவர் வாழ் தரு⋆ தென் புது-
    வை விட்டுசித்தன் சொல்⋆
கற்றிவை பாட வல்லார்⋆ கடல் வண்ணன்
    கழலிணை காண்பார்களே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com